உ

திருக்கோயில் வழிபாடு



வெளியீடு:

காரைக்குடி

திருமிகு.சுப.சித. பழநியப்பச் செட்டியார்

ஆடிட்டர், சென்னை

உ

திருக்கோயில் வழிபாடு

வெளியிடுதல்:

குன்றக்குடி
திருவண்ணாமலை ஆதீனகர்த்தர்
46வது குருமகா சந்நிதானம்
திருவருள்திரு தெய்வசிகாமணி
பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

வெளியீடு:

காரைக்குடி
திருமிகு.சுப.சித. பழநியப்பச் செட்டியார்
ஆடிட்டர், சென்னை.

தொகுப்பு ஆக்கம்:

வித்வான்.க. கதிரேசன் எம்.ஏ., பி.எட்
ஆதீனப் புலவர்
குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம்
குன்றக்குடி - 630 206

உ

சிவசிவ

திருவருள் திரு
தெய்வசிகாமணி பொன்னம்பல
தேசிக பரமாசாரிய சுவாமிகள்
(ஆதீனகர்த்தர்)

திருவண்ணாமலை ஆதீனம்
குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்
தமிழ்நாடு

✆ குன்றக்குடி - 04577 - 84267
காரைக்குடி - 04565 - 23216

நாள்: 25.3.99

வாழ்த்துரை

திருக்கோயில் வழிபாட்டு முறைகளை விளக்கும் வண்ணம் இந்நூல் நம் அருமை ஆதீனப்புலவர் க.கதிரேசனாரால் சிறப்பாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

வழிபாடு, உணர்வு கலந்ததா? உயிர்ப்புக் கலந்ததா? இல்லை, சடங்கு சம்பிரதாயங்கள் மட்டும் கருதியதா? என்ற வினாக்கள் இன்று நேற்றல்ல, பெரியபுராண காலத்திலேயே தோன்றிவிட்டன. சுட்ட புலாலைத் தொட்டுச் சுவைத்துப் படைப்பதும், உமிழ்நீரே திருமஞ்சனநீராய் மகிழ்விப்பதும், கல்எறிந்து வழிபாடு நிகழ்த்துவார் மனக்கோயிலில் மாகேசன் எழுந்தருளியதும் வழிபாடு எத்தகையதாக இருக்கவேண்டும் என்பதற்குரிய வரலாற்றுத் தடங்கள்!

வழிபாடு யாருக்கு? மனித குலத்திற்கா? ஆண்டவனுக்கா? இல்லை! அதையும் திருத்திக் கூற வேண்டும்! வழிபாடு உயிர்க்குலத்திற்கா! ஆண்டவனுக்கா? எறும்பு பூசித்துள்ளது. ஆனை பூசித்துள்ளது. எறும்பும் ஆனையும் பூசித்த ஆலயத்தில்தான் மனிதர்கள் நுழைய மறுதலிக்கப்பட்டுள்ளனர். எறும்பு அருச்சித்த மொழியும் யானை ஓதித்துதித்த மொழியும் உணர்ந்த ஈசனுக்குத் தமிழ்புரியாது என்று சொல்வது நமக்குப் புரியாத புதிராக இருக்கின்றது. வழிபாடு, இறைவனுக்குத்தானா? எல்லா உயிர்களும் தம்மையே போற்றித் துதிக்க வேண்டும் என்ற பேராசையுணர்வு உடையவனா இறைவன்? உயிர்க்குலம் உய்தி

பெறவே வழிபாடு! மனிதகுலம் தம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ளவே வழிபாடு!.

வழிபாட்டு நெறிமுறைகளை மிகச்சிறப்பாக நம் கதிரேசனார் விளக்கியுள்ளார். கூட்டு வழிபாட்டுக்குரிய இடம் திருக்கோயில் வளாகம் என்ற கருத்து எண்ணி எண்ணி மகிழத்தக்கது. சாதி குல வேறுபாடின்றி மனிதகுலம் கூடி வழிபடும் இடம்தான் திருக்கோயில்! நுழைவுச்சீட்டு முறை வந்த பிறகு காக்கும் பொருளான இறைவன், காட்சிப் பொருளாக மாற்றப்பட்டான்! திருஎல்லை, திருக்கோபுரம், திருக்கோயில் பற்றிய தத்துவவிளக்கம் அருமையாகவுள்ளது நந்தி, பலிபீடம் வாழ்வியல்பாடம் உணர்த்தும் சின்னங்கள்; பற்றற்ற உழைப்பும் ஆணவம் அகற்றிய வாழ்வும் ஆன்மீகம் என்று அறிவிப்பன. செழுந்தமிழ்ப் பண்பாடே சைவ சமயம் என்று உலகுக்கு உணர்த்திய நால்வரை வழிபடுவது முதன்மையானது என்ற விளக்கம் போற்றுதற்குரியது.

குன்றக்குடி முருகப்பெருமான் அருட்பொழிவு பற்றிக் குன்றக்குடிப் பதிகத்தில் எடுத்துக் காட்டியிருப்பது மிக்க அருமை! திருமுறைகளின் மிக அரிய பாடல்களும் உரைவிளக்கத்துடன் இந்நூலில் அமைந்திருப்பது போற்றுதற்குரியது.

நூலாசிரியர் ஆதீனப்புலவர் க.கதிரேசனார் சமய உணர்வில் தோய்ந்தவர்; தெய்வத்தமிழ்த் திருமுறை ஞானமும், செந்தமிழ் இலக்கணப் புலமையும் ஒருசேரக் கைவரப்பெற்றவர். சமய ஞானத்தை விரும்புவோருக்கு இந்நூல் அரிய கருவூலம். திருக்கோயில் வழிபாட்டு முறையைச் சிறப்பாக இந்நூல் வழிநடத்தும் என்பது திண்ணம்.

நூல் பதிப்பிக்க உதவிய காரைக்குடி அன்பர் சுப.சித.பழனியப்பச் செட்டியார் அவர்கள் பாராட்டுக்குரியவர்; அறம்பல ஆற்றும் அருட்செல்வர். இந்நூல் பதிப்பிக்க உதவிய அவரது அன்புள்ளத்தைப் போற்றுகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு
பொன்னம்பல அடிகளார்

உ

அணிந்துரை

தமிழாகரர் தெ. முருகசாமி, எம்.ஏ., பி.ஓ.எல்.,
முதல்வர் இராமசாமி தமிழ்க்கல்லூரி
காரைக்குடி

ஐம்பூத இடமாகவும் அவற்றின் இயக்கமாகவும் உள்ள இவ்வண்டத்தின் கூறுகள் ஒவ்வோர் பிண்டத்திலும் உண்டு. இவ்வுண்மையைப் பகுத்தறிவுள்ள மனிதன் உணர்ந்ததால், உணர்ந்த உள்ளக் கிடக்கையின் வெளிப்பாட்டைத் திருக்கோயிலாகப் பரிணமிக்கச் செய்தான். இதனால் தத்துவார்த்த முறையில் பல்வேறு கட்டிட அமைப்புக்களும் திருமூர்த்தங்களும் உருவாக்கப்பட்டன.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்ற திருமந்திரப்படி நாமே கோயில், கோயிலே நாம். கோயில் மண்டபங்கள் நம் உடலின் ஆறு ஆதாரங்கள். தலை-மேல்தளம், தலை மேல் குவிக்கும் கையின் தோற்றம் கோபுரம். இதயம் ஆண்டவன் தங்கும் கருவறை. இத்தத்துவார்த்தக் கருத்துக்களின் பெருக்கங்களே திருக்கோயில் வழிபாடுகளாகப் பல்கிப் பெருகியுள்ளன.

இவைபற்றிய சிறப்பான கருத்துக்களைக் குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனப் புலவர், ஆன்மீகச் செல்வர் க.கதிரேசனார் அவர்கள் திருக்கோயில் வழிபாடு என்ற தலைப்பில் விரிவாக எழுதியுள்ளார்கள்.

இடமிருந்து வலமாக வந்து வழிபடத்தக்க வகையில் கோயிலின் ஒவ்வோர் அமைப்பையும் கட்டுரை விளக்கமாகக் கூறுகிறது. திருக்கோயிலின் நுழைவாயிலில் உள்ள கொடிமரம், பலிபீடம், முதலியவற்றைச் சுட்டிக்காட்டி மூத்தபிள்ளையார் சந்நிதியிலிருந்து சண்டீசர், வைரவர் வரையான கடவுளரை ஆன்மாக்களுக்குக் கண்டு காட்டும் திறம் பாராட்டும்படியாக உள்ளது.

இறைவழிபாட்டில் ஆன்மாவைப் பக்குவப்படுத்தும் முறையாக அவ்வச் சந்நிதிகளுக்கேற்ற தெய்வப்பாசுரங்களைப் பொருளுணர்ந்து சொல்லச் செய்யும் கட்டுரையாளரின் முயற்சிக்குப் பெருத்த புண்ணியம் உண்டு. மேலும் சூரியக் கதிர் வெப்பத்தை ஒரு குவியாடி மூலம் ஒருசேரப் பெறுதல்போல், இந்நற்பேற்றை ஆன்மாக்களுக்கு உருவாக்க அன்பர் க.கதிரேசனாரை ஆற்றுபடுத்திய பெருமை மதிப்புயர் சுப.சித. பழனியப்பச்செட்டியார் அவர்களையே சாரும். அன்னார்,

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

என்ற குறளுக்குத்தக வாழ்பவர். "தந்தையனையர் தனையர்" என்பதற்கேற்ப வழிவழியான குடிப்பெருமையும் மிக்க அப்பெருந்தகையாளரின் முயற்சி எல்லார்க்கும் பரந்து பயன் நல்குவதுடன் இதுபோன்ற ஆன்மநேயத் தொண்டைத் தொடர்ந்து புரிய அன்னார்க்கு ஆண்டவன் அருளுவானாக.

இதன் பின்னிணைப்பாக மாதப்பதிகம், வாரப்பதிகம் என இரு பதிகங்களைக் கன்னித்தமிழ்க் கதிரேசனார் பாடிச்சேர்த்துள்ளார்கள். ஆதி அந்தம் இல்லா ஆண்டவனை எப்போதும் எண்ணுதல் (நினைத்தல்) வேண்டும் என்ற குறிப்புத் தொனிக்கும்படியாக ஒற்றைப்படை எண்ணின் ஆதியான ஒன்றும் அந்தமான ஒன்பதும் இணைந்த பத்தொன்பது பாடல்கள் குன்றக்குடிச் சண்முகநாதப் பெருமான் பற்றியவையாகும். படிப்பார் நெஞ்சில் எளிதில் குடியேறத்தக்க இனிய தமிழ்ப்பதங்களால் கட்டளைக்கலியில் பாடல்கள் அமைந்துள்ளன.

ஒவ்வொரு மாதச்சிறப்பினையும் புலப்படும்படிப் பாடியருளிய திருஞான சம்பந்தரின் மயிலாப்பூர்ப்பதிகம் போல நம் கதிரேசனார் மயிலாபுரியான குன்றக்குடியானை "நெஞ்சில் இருப்பாய் வந்து தங்கவேண்டும்" என நெக்குருகிப் பாடுகிறார். போர் ஓலம் நீங்கி நாட்டில் சீர்சீலம் எப்போது வரும் என்ற ஏக்கப் பெருமூச்சின் அனலை மார்கழிப்பாடலில் காணலாம். மாசிப் பிறைபோல் வளரும் இப்பதிகத்தோடு வாரப்பதிகத்தின் உள்ளடக்கமாக **"அறிவைத் துலங்கச்செய்"** என ஆறுமுக அப்பனிடம் கவிஞர் வாரமாக (அன்பாக) வேண்டுவது நயமாக உள்ளது.

வாரப்பதிகம் ஆன்மார்த்த பூசைப்பாடல் போலவும், மாதப்பதிகம் பரார்த்தபூசைப்பாடல் போலவும் இயல்பாக அமைந்துள்ளன. திட்டமிட்டுப் பாடப்பெறாத இவ்வியற்கை நிலையே பாடலின் தெய்வீகத்தை நலம் பொலியச் செய்கின்றது.

இத்தெய்வத்தரிசனத்தை அணிந்துரை வாயிலாக எனக்குக் காட்டிய கதிரேசர்க்கு நன்றியும் வணக்கமும் உரியதாகுக.

அன்புள்ள,

3.3.99
காரைக்குடி

தெ. முருகசாமி, எம்.ஏ., பி.ஓ.எல்.,
முதல்வர்,
இராமசாமி தமிழ்க் கல்லூரி

உ

தோரணவாயில்

திருக்கோயில்கள் நமது பண்பாட்டுச் சின்னங்கள். இவற்றைப் பேணுவது பண்பாட்டைப் பேணுவதாகும். இவற்றைப் பேணும் நெறி யாது? பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை திருக்குட நன்னீராட்டுச் செய்வது மட்டுமன்று; நம்பொருட்டு அங்கு எழுந்தருளியுள்ள பரம்பொருளைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க ஓதி வழிபடுவதும் ஆகும்.

உள்ளம் உருகி ஓதிவழிபட இந்நூல் உதவும் என்று எண்ணுகிறேன். புரிந்து கொண்டு வழிபடுதல், ஈடுபாட்டை வளர்க்குமாதலின்; மூர்த்திகளுக்குரிய சிறுவிளக்கம், வழிபாட்டுக்குரிய அருளாளர் திருப்பாடல்கள், இவைகளுக்குக் கருத்துரை என்கிற வகையில் இந்நூல் அமைந்து ஆற்றுப்படுத்துகிறது.

இதன் இறுதிப் பகுதியில் இடைக்காலத்து அமைந்த மரபான மாதப்பதிகம், வாரப்பதிகம் அமைந்துள்ளன. இவை குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப்பெருமானை மையமாகக் கொண்டு அமைந்தனவாயினும், பிள்ளையார்பட்டி, மதுரை, தில்லை, பழனி மூர்த்தியர்க்கும் உரியனவாக அமைத்துக்கொண்டு ஓதும் வழிமுறை அங்குக் குறிப்பிடப் பெற்றுள்ளது.

இவ்வகைத் திருப்பணியில் அடியேனை ஈர்த்தும் ஈடுபடுத்தியும் ஆட்கொண்டருளும் வணக்கத்திற்கும் வழிபாட்டுக்கும் போற்றுதலுக்குமுரிய குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீன 45ஆவது குருமூர்த்தி தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் பொன்னார் திருவடிகட்கு மனம் மொழி மெய்யாலான பணிவன்பு கலந்த வணக்கங்களைச் செலுத்தி மகிழ்கிறேன்.

தமது தொடர்ச்சியான பல்வேறு பணிகளுக்கிடையே வழக்கம்போல் இந்நூலுக்கும் ஆசியுரை வழங்கிச் சிறப்பித்து அருள்பாலித்துள்ள வணக்கத்திற்கும் வழிபாட்டிற்கும் போற்றுதலுக்கும் உரிய குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீன 46ஆவது குருமகாசந்நிதானம் திருவருள்திரு.தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் பொன்னார் திருவடிகட்கு, மனம் மொழி மெய்யாலான பணிவன்புகலந்த வணக்கங்களைச் செலுத்தி மகிழ்கிறேன்.

தமது பல்வேறு பணிகளுக்கிடையே இந்நூலுக்குக் கனிவார்ந்த அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ள காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரி முதல்வர் இனிய உள்ளத்தர் தமிழாகரர் திருமிகு.தெ.முருகசாமி ஐயா அவர்கட்கு உள்ளங்கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலைத் தன்னார்வமுடன் அச்சேற்றித்தர முன்வந்தவர், என் உடன்பிறவா அண்ணார், சென்னை ஆடிட்டர் காரைக்குடி திருமிகு. சுப.சித. பழனியப்பச் செட்டியார் அவர்கள். தமது தந்தையார் அமரர் சுப.சிதம்பரம் செட்டியார் அவர்களைப் போலவே திருமுறைகள்பால் ஈடுபாடு மிக்கவர்; சென்னையில் புகழ்பூத்த ஆடிட்டராக-தணிக்கையாளராக- பணிசெய்து வருகின்றவர்; காசியில் தமது ஆச்சியுடன் பெருமானை வழிபாடு செய்து கொண்டு தமது பவளவிழாவை ஆச்சியுடன் அமைத்துக் கொண்டவர்; இவ்விழாவின் நினைவாக, ரிஷிகேசத்தில் ரூ. 1,50,000இல் அறப்பணியில் ஈடுபட்டுள்ளவர்; கடந்த 32 ஆண்டுகளாகத் தமது குன்றக்குடி இல்லத்தில் அடியேனை அற்பக் குடிக்கூலிக்கு அமர்த்தியுள்ளவர்.நலம் சான்ற இவர்கட்கும் ஆச்சிக்கும் என் வணக்கத்தையும் நன்றியையும் செலுத்தி மகிழ்கிறேன்.

இந்நூலின் மெய்ப்புத் திருத்தி உதவியுள்ள புலவர் மு.ச.சுப்பிரமணியன் எம்.ஏ., பி.எட்., அவர்கட்கும், புலவர் சு. வீரமுத்து அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை நன்முறையில் அச்சிட்டுத் தந்துள்ள காரைக்குடி கே.பி.எஸ்.வி. கம்ப்யூட்டர்ஸ்க்கு நன்றி.

"புண்ணியனை நண்ணிய புண்ணியத்துளோமே"

அடியவன்,
வித்துவான். க. கதிரேசன் எம். ஏ., பி.எட்.,
ஆதீனப் புலவர்
குன்றக்குடி - திருவண்ணாமலை ஆதீனம்.

25.3.99
குன்றக்குடி

உ

திருக்கோயில் வழிபாடு

எல்லாம் வல்ல இறைவன் திருவருள் வடிவே இப்பேரண்டம். எங்கும் அவன் திருவருட்காட்சி. இத்திருவருளின் குறிப்பு ஒன்றே. இக்குறிப்பு, உயிர்க்குலம் ஈடேற்றம் பெறவேண்டும் என்பதாகும். இக்குறிப்புணர்ந்த "நம் தமிழ்ச் சான்றோர் அகத்தெழுந்த செழுமையான நன்றிப் பெருக்கின் வெளிப்பாடே தமிழ்ப்பெரு மக்களின் இறைவழிப்பாட்டிற்கு அடிப்படை" என்பார்கள் நம் வணக்கத்திற்குரிய அருள்நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்.

வழிபாடு! ஆம்; "காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது" தான் வழிபாடு. "நம்மை வழிப்படுத்துவது; நாம் அதன்வழிப்படுவது தான் வழிபாடு" என்பதும் அவர்களின் பொருளுரை.

வழிப்படுத்துவது என்றால் என்ன? இறைவன் திருவுள்ளம், அவலக்கவலைகளிலிருந்து நம்மை விடுவிப்பது; தன் தண்ணார் அருளில் திளைக்கச் செய்வது; நம் உள்ளத்து அழுக்கைக் கழுவிக் களைந்து நம் அவலக் கவலைகளுக்குத் தீர்வு காணும் வழிகாட்டுவது; அவ்வழியே நம்மை ஈர்த்துச் சென்று வற்றாமுற்றாப் பேரின்பப் பெருவாழ்வில் நிலைக்க, திளைக்கச் செய்வது ஆகும். இங்ஙனம் சீரிய வழியினைக் காட்டி, அவ்வழியில் நாம் செல்லத் திருவுளம் கொண்டிருப்பதே வழிப்படுத்துவது ஆகும்.

அவனருளாலே அவன் குறிப்புணர்ந்து, நாம் அதன் வழிநடந்து பேரின்பப் பெருவாழ்வு பெறுவதே வழிபாட்டின் பயன் - வழிப்படுவது ஆகும். "நன்னெறிக்கு உய்ப்பது" என்கிற அப்பரடிகள் அருள்வாக்கினை எண்ணி மகிழ்க.

தனித்திருந்து வழிபடும் வழிபாடு ஒருவகை இன்ப அனுபவம்; தன் குடும்பத்தாருடன் கூடிக்கலந்து வழிபடும் குடும்ப வழிபாடு மற்றொருவகை இன்ப அனுபவம்; பலதரப்பட்ட மக்களுடன் கூடிக்கலந்து வழிபடும் கூட்டுவழிபாடு பிறிதொரு வகை இன்ப அனுபவம்.

கூட்டு வழிபாட்டிற்குப் பெரிதும் வாய்ப்பான இடம் திருக்கோயில். விரிந்து பரந்த இடப்பரப்பு மட்டுமா? ஞாயிற்றொளி, குவியாடி வழியே ஊடுருவி, ஒருபுள்ளியில் குவியும் போது பேராற்றல் பெறுகிறது. அந்தக் குவியாடியாக விளங்கித் திருவருளை ஒருங்கு சேர்த்து நுட்பமாகக் குவிப்பது திருக்கோயில். அம்மட்டோ? நால்வர் பெருமக்களும் நல்லடியார்களும் சென்று சென்று வணங்கி என்புநைந்துருகி இயற்றிய வளமான வழிபாட்டு எண்ண அலைகள் பொங்கித் ததும்பிப் பூரணமாய்ப் பொலியும் இடம் திருக்கோயில். இக்காரணங்களாலன்றோ திருக்கோயில் வழிபாடு உலகெங்கும் ஏற்றம் பெற்றுள்ளது.

எப்பணிக்கும் ஒரு முன்னேற்பாடு-தக்கவாறு தன்னைத் தகுதிப்படுத்திக் கொள்ளுதல்-உண்டு. திருக்கோயில் வழிபாட்டுக்கும் இது பொருந்தும். திருக்கோயில் வழிபாட்டுக்குப் புறப்படுமுன் அகத்தூய்மை புறத்தூய்மை வேண்டற்பாலது. நிலைமைக்கேற்ப நீராடல் அல்லது கைகால் முகம் கழுவித்தூய்மை செய்து கொள்ளுதல் உதவும்.

" திருவாய் பொலிய சிவாயநம என்று நீறணிந்தேன்" என்பது அப்பரடிகளின் அருள்வாக்கு. " திருவாய் பொலிய" என்கிற தொடர், உள்ளம் பொலியத் திருவைந் தெழுத்தை உள்ளத்தில் ஏந்துக என்பதையும் குறிப்பால் உணர்த்தும்.

இயலுமானால், திருவிளக்குக்கு எண்ணெய், மலர்மாலை, மலர்ச்சரம், கற்பூரம் முதலியனவும் எடுத்துச் செல்க. இது நம் வாய்ப்பினைப் பொருத்தது. "அன்போடு உருகி அகம் குழைதலே" எல்லார்க்கும் எக்காலத்துக்கும் ஒப்ப உரியது; அனைத்தினும் உயர்ந்தது; இன்றியமையாதது.

திருக்கோயிலுக்குப் புறப்படுமுன் நம் வீட்டில் எழுந்தருளி அருள்பாலிக்கும் வீட்டுப்பெருமானை- இல்லுறை தெய்வத்தை-வணங்கி வழிபாட்டு நினைவுடன் திருக்கோயிலுக்குப் புறப்படுவோம் வாருங்கள்.

திருஎல்லை:

நம் பார்வையில் திருக்கோயில் கோபுரம் தென்படும் சூழல் திருவெல்லை எனப்பெறும். திருக்கோயிலில் இருந்து நான்கு திசைகளிலும் அதன் அருள் வீச்சு- திருவருள்- விளங்கும் சூழல் இது. வழிபாட்டின் பொருட்டுப் புறப்பட்ட நாம் நம் உள்ளத்தை அதில் மேலும் ஒருமுகப்படுத்திக்கொள்ள வேண்டிய இடம் இது. இவ்வெல்லையிலே நம் கண்முன் காணும் திருக்கோபுரத்தை நம் நெஞ்சிருத்தி வணங்குதல் மரபு.

"வேண்டியன எல்லாம் நல்கு
தில்லைசூழ் திருஎல்லை பணிந்தார்"
- பெரியபுராணம் - 2050

என்பது தெய்வச் சேக்கிழார் வாக்கு.

திருக்கோபுரம்:

இது இறைவனின் திரு அடையாளம். எனவே இதனைத் "தூல லிங்கம்" என்பர். "பேரடையாளம் " என்று வழங்கப்பெறுவதும் இதுவே. இறைவனின் திருவருள் வீச்சினை நினைவு கொள்ளச் செய்து, விண்ணளந்து காட்டி வினை தீர்ப்பது இது. எனவே இதனை வணங்கி நம் சிந்தையை மேலும் ஒருமுகப்படுத்துவோம்.

திருக்கொடி மரம்:

பெருமானின் வெற்றிக் குறியீடு இது என்பர். சிவபெருமானின் கொடி விடைக் கொடி - எருதுக்கொடி.

" சீர்கெழு கொடியும் அவ் ஏறு என்ப"

என்பது புற நானூறு. ஆன்மாக்கள் ஈடேற ஐயன் நிகழ்த்தும் ஐந்தொழில் வெற்றிக் குறியீடு இது. விடை, அறத்தின் சின்னம். இவ்விடையே வாலிழைபாகன் கொடி இலச்சினை.

1. அஞ்செழுத்தும் 2. எட்டெழுத்தும் 3. ஆறெழுத்தும் 4. நாலெழுத்தும்
5. பிஞ்செழுத்தும் மேலைப் 6. பெரு வெழுத்தும் - நெஞ்சமுத்திப்
7. பேசும் எழுத்துடனே 8. பேசா எழுத்தினையும்
கூசாமல் காட்டக் கொடி.

- கொடிக்கவி - 4

1. "சிவாய நம" 2. "ஓம் ஆம் ஔம் சிவாய நம"
3. " ஓம் சிவாய நம" 4. "ஓம் சிவாய"
5. " வ" (சத்தி திருவருள்) 6. " சி" (பரசிவம்)
7. " வ" (சத்தி) 8. " சி" (பரசிவம்)
(ஒற்று நீக்கி எண்ணிக்கை)

நந்தி:

பெருமானின் ஊர்தி இது; அறத்தின் சின்னம். அருளாளனான பெருமான், எருதேறி அறமூர்ந்து வருவதை

"ஊர்தி வால்வெள் ஏறே"

- புறநானூறு

என்று போற்றும். அறம் ஊர்ந்து, அறம் உயர்த்தியவன் பெருமான் என்பதை ஊர்தியும் கொடியும் உணர்த்துவன. அறத்தின் குறியீடாக விளங்கும் நந்தியை வணங்குவோம்.

பலிபீடம்:

பலியிடுதல் = ஒப்படைத்தல். யான் எனது என்னும் செருக்குகளை-அகப்பற்று புற-பற்றுகளைப் பலியிட வேண்டிய-ஒப்படைக்க வேண்டிய-இடம் இது. (அறியாமையால் காலப்போக்கில் உயிர்ப்பலிதரும் இடமாக விளங்கத் தொடங்கிவிட்டது) இரு பற்றுகளையும் பலிதந்து வணங்குவோம்.

காவல் நந்தி:

இவரது அனுமதி, ஆணைபெற்றே இறைவன் திருமுன்பு செல்லுதல் வேண்டும் என்பது மரபு. வணங்கி அருளாணை பெறுவோம்.

நால்வர்:

குரு, இலிங்கம், சங்கமம் என்கிற மூவகை வழிபாடுகளில் சங்கம வழிபாடாகிய அடியார் வழிபாட்டினால் மட்டுமே திருவருட் பேறு பெற்றவர் பலர். இத்தகு சிறப்புடையது அடியார் வழிபாடு. "கேடும் ஆக்கமும் கெட்ட திருவும்;" "வீடும் வேண்டா விறலும்" கொண்டது புனிதர் பேரவை. இறைவனடியாகிய புணையை நாம் எளிதில் பெறவும், அதனுதவியால் கரையேறவும் துணையாய் நிற்பவர்கள். போற்றுவோம்.

"பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பின் அணைந்தபிரான் அடி போற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி"

கருத்து:

பாண்டிய நாட்டு அரசனாகிய கூன்பாண்டியனின் வெப்பு நோய்தீர்த்த சீர்காழித் திருஞானசம்பந்தரின் திருவடிகள் வாழ்க; வணக்கம். கடலில் கல்லையே தெப்பமாகக் கொண்டு கரையேறிய திருநாவுக்கரசரின் திருவடிகள் வாழ்க; வணக்கம். திருநாவலூரில் தன் திருமணத்தின் போது முதியவராய் வந்து வழக்குரைத்த சிவபெருமானுடன் வன்மை பேசியதால் அவனாலேயே "வன்றொண்டன் " என்று பெயர் சூட்டப்பெற்ற சுந்தரர் திருவடிகள் வாழ்க; வணக்கம். பிறரும் பிறவும் அழியும் ஊழிக் காலத்திலும்கூட அழியாது நிறைந்த திருவாசகம் அருளிய திருவாதவூரராகிய மாணிக்கவாசகர் திருவடிகள் வாழ்க; வணக்கம்.

(அருள்தரு ஆடவல்லபெருமானே, மாணிக்கவாசகரின் திருவாசகத்தைப் படிஎடுத்து வைத்துக் கொண்டதால், அப்பெருமானோடு அந்நூற்படியும் அழியாது நிலைத்து நிறைந்ததாயிற்று).

நால்வர் உள்ளிட்ட புனிதர்பேரவை:

(தனிஅடியார் 63 + தொகையடியார் 9. ஆக 72).

"மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயும் நாயன்மார் தூய சொல்மலர்
பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே"

\- பெரியபுராணம் - 4

கருத்து:

பிறைமதிவளரும் சடைமுடி உடையவர் பொன்னம்-பலத்தாடும் பெருமான். இவரை முன்னவராகக் கொண்டு துதிக்கும் நாயன்மார்கள் அருளியவை சொல்மலர்கள்-பாமாலைகள். இவை நலம் பொதிந்தவை. இந்நலத்தையே நுகர்ந்து இன்புறும் புனிதராகிய நல்லடியார் பேரவை, "சான்றோர் என்றும் விளங்கி வெல்வர்" என்கிற விதிமுறைக்கு ஏற்ப உலகில் ஒளியுடன் விளங்கி வெல்க.

மூத்தநாயனார்:

அறிவாற்றலின் திருவுரு இவர். குற்றமற்ற தலைவர் என்கிற பொருளில் விநாயகர் என்றும், கணங்களுக்குப்பதி-தலைவர் என்கிற பொருளில் கணபதி என்றும் குறிப்பர். இவர் திருமுன் நாம் தலையிற் குட்டிக் கொள்வது நம் நினைவு - ஒருமைக்கு என்றும், காதுகளைக் கைகளால் பற்றுதல் கேள்வி ஞானத்தின் பொருட்டு என்றும், தோப்புக்கரணம் இடுதல் செய்பிழை பொறுத்தருள்க என்றும் விளக்கம் பெறும். இங்ஙனம் வணங்குவோம்.

"திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை"

திருமுறை 11. மூத்தநாயனார் இரட்டைமணிமாலை: 1

தன்னைக் காதலுடன் கைகூப்பி வணங்குவோர்க்கு, ஆனைமுகப்பெருமான் திருவை மேன்மேலும் பெருகச்செய்யும்; அவர்கள் மேற்கொள்ளும் நற்செயல்கள்

எளிதில் நிறைவேறச்செய்யும்; நேர்மைச் சொல்லாலான வாக்கும், பெருமையும் மேன்மேல் பெருக்கும்; இவை அவர்களிடம் இன்றேல் உருவாக்கிப் பெருக்கும். எனவே தேவர்களும் இப்பெருமானைக் கனிந்த அன்புடன் வணங்குவர்.

(திரு: செல்வம், பொலிவு, மேன்மை, விரும்பும் தன்மை, தெய்விகம்).

ஆலமர் செல்வன் (தெட்சிணாமூர்த்தி)

ஞானத்தை மோனநிலையில் இருந்து நமக்கு அருளும் மூர்த்தி; வினையின் நீங்கி விளங்கிய அறிவேயாய மூர்த்தி; முதற்குரு மூர்த்தி இவர். ஞானத்தின் மேலானதில்லை. ஞானம் பெற இவரை வணங்குவது மரபு.

கல்லாலின் புடைஅமர்ந்து நான்மறைஆ றங்கமுதல்
கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய்
மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி
இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவனை நினையாமல் நினைந்துபவத்
தொடக்கை வெல்வாம்.

- திருவிளையாடற் புராணம்.

கருத்து:

சொல்கடந்த முழுமையானதாக, நான்குமறைகளுக்கும் எட்டாததாக, எல்லாமாக, இவையல்லாததாக உள்ளவன் பரம்பொருள். இப்பரம்பொருள், ஆலமர்செல்வனாகக் கல்லாலமரத்தடியில் தெற்கு நோக்கிக் குருமூர்த்தியாக எழுந்தருளினன்.

எதிரே சனகாதி முனிவர் உபதேசம் பெற அமர்ந்திருந்தனர். இவர்கள் இருக்கு முதலிய நால்வேதம், மந்திரம், வியாகர்ணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம் ஆகிய ஆறங்கம் கற்றும் கேட்டும் அவற்றில் வல்லவரானவர்கள். இவர்கட்குப் பெருமான் வாய்திறந்து கூறாமல், தன்னிலையை உள்ளது உள்ளவாறே உபதேசித்தான். இப்பெருமானை இடைவிடாது நினைந்து வணங்கிப் பிறவிக்கட்டறுத்து வீட்டின்பம் பெறுவோம்.

முருகப்பெருமான்:

அன்பு, அறிவு, ஆற்றலின் திருவுரு. இவர்கைவேல் ஞானசத்தி; தேவியர் இச்சை கிரியாசத்திகள். இவையனைத்தும் நம்முள்பெருக, பெற இப்பெருமானை வழிபடுவது மரபு.

இவர் சிவத்திற்குக் குருநாதர்
சிவமாய் விளங்கும் குருநாதர்
நம்மைச் சிவத்திற் சேர்க்கும் குருநாதர்.

எனவே இவரைச் "சிவகுருநாதர்" என்பது வழக்கம். "இவர்-வேறு அவர் வேறு இல்லை; அவரே இவர்; இவரே அவர்." வணங்கிச் சத்திகள் பெறுவோம்.

அ) *"உருவாய் அருவாய் உளதாய் இலதாய்*
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"

கந்தரனுபூதி

மரு = மணம், மணி = நவமணி, கதி = வீடுபேறு. அனைத்தும் இப்பெருமானே என்பது கருத்து.

ஆ) *எட்டுருத் தெய்வமும் நீயே எட்டுக்கு அதீதமும்*
ஆயே
தட்டுப் படாதஅ தீத சாமியும் நீஎன ஓர்வார்
முட்டுப் படாமல் வந்தென்றும் முற்றுச் செயும்
அருட்பொன்னைக்
கொட்டிக் கொடுக்கின்ற கோவே குன்றக்
குடியுறை தேவே.

திருக்குன்றக்குடிப் பதிகம் - 6.

<u>கருத்து:</u>

குன்றக்குடியில் எழுந்தருளி இருந்து அருளை வாரி வழங்கும் பெருமானே! நிலம், நீர், தீ, காற்று, வான், ஞாயிறு, திங்கள், உயிர் என்கிற எண்வகை உருக்கொண்ட தெய்வமும் நீயே ஆவாய்; இவற்றின் மேம்பட்டு விளங்குகின்றவனும் நீயே ஆவாய்; புலன்களுக்குத் தட்டுப்படாத மிக மேம்பட்ட கடவுளும் நீயே ஆவாய் என்று தெளிந்தவர் ஞானியர். இவர்களுக்குக் குறை ஏற்படாதவாறு இவர்முன் வந்து இவர்களை முழுமையுள்ளவர்களாக ஆக்கும் உன் திருவருளாகிய பொன்னை வாரிக்கொடுக்கும் அரசனும் நீயே ஆவாய். உன் திருவருட் பொன்னை எனக்கும் வாரி வழங்கியருள்க.

இ) *முடியா முதலே சரணம் சரணம்*
முருகா குமரா சரணம் சரண்ம்
வடிவேல் அரசே சரணம் சரணம்
மயில்ஊர் மணியே சரணம் சரணம்
அடியார்க்கு எளியாய் சரணம் சரணம்
அரியாய் பெரியாய் சரணம் சரணம்
கடியாக் கதியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்.

கருத்து:

எக்காலத்தும் முடிவே இல்லாத முதற்பொருளே; முருகா; குமரா; கூர்மையான வேல் ஏந்திய அரசனே; மயிலேறி அதனை நடத்தும் மணியே; அடியவர்களுக்கு எளிதில் அருள்புரிகின்றவனே; மனம் வாக்குக்கு அரியவனே; யார்க்கும் பெரியவனே; உயிர்களுக்கு விலக்க இயலாத- அடைந்தே தீரவேண்டிய-வீடுபேறாக உள்ளவனே; கந்தனே உன் திருவடிகட்கு அடைக்கலம். எம்மைக் காத்தருள்வாயாக.

(சரணம்[1] சரணம்[2] சரணம்[3] = திருவடிகட்கு[1] அடைக்கலம்[2] அடைக்கலம்[3])

தண்டாயுதபாணி:

ஞானத்தின் திருவுரு இப்பெருமான். அதனாலன்றோ ஞானப்பழம் வேட்டான்; அதன்பொருட்டு மயிலேறி உலகு சுற்றினான்; ஞானப்பழமாம் தன்னையே தன் அடியார்க்கு வழங்கப் பழனிக் குன்றில் எழுந்தருளியுள்ளான். மூலபண்டாரம் வழங்குகிறான் முந்துவோம்.

"அயில்வேல் படையும் திருத்தண்டும்
அகலத் தொடுதிண் கையில்தாங்கி
அங்கை மலரொன்று இடப்பாகத்து
அவிரும் கடிமீது அமைதரவைத்து

எயில்வே வுறநக் கவர்மகவென்று
யாரும் அறியும் படிமுழுநீற்று
இயக்கம் காட்டிக் கண்டிகையும்
ஏற்ற வயின்தோறு அணிஅணிந்து

கயிலைக் கிரியின் இரசிதம்போல்
கவின்கோ வணம்சீ ளொடுதரித்துக்
கழல்தாட்கு அருட்பா துகைசாத்திக்
கனிவாய் முறுவ லொடு நின்றாய்

மயில்வா கனத்தில் ஒருக்கால்முன்
வருக வருக வருகவே
வளம்தோய் பழனி மலைக்குரவா
வருக வருக வருவே."

வண்ணச்சரபம்-பழனித்திருவாயிரம் பிள்ளை.....வருகை. 1

கருத்து:

கூர்மையான வேற்படையைத் திருமார்பில் சாத்தி; திருத்தண்டினை வலிமை வாய்ந்த திருக்கையில் தாங்கி; அழகிய மலர் தாங்கிய இடது திருக்கையை ஒளிவீசும் இடப்பாகத்து இடுப்பில் பொருத்தமுற வைத்து; சிரிப்பால் முப்புரம் எரித்த அச்சிவன் மகன் என்பதை யாவரும் அறியுமாறு அச்சிவன் பூசிய வெண்ணீற்றைத் திருமேனி எங்கும் பூசி, கண்டிகை அணிந்து; ஏற்றவாறு இடங்கள் தோறும் பலவகை அணி அணிந்து; கயிலை மலையின் ஒளிபோல் வெள்ளொளிவீசும் அழகிய கோவணத்தைக் கீளொடு தரித்து; வீரக்கழல் அணிந்த திருவடிகட்குத் திருவருள் துலங்கும் திருப்பாதுகை அணிந்து; கனிவாயில் புன்முறுவல் பூத்து அருள்வழங்கி நிற்பவனே! மயில் வாகனத்தில் என் முன் ஒருமுறை காட்சி வழங்க வருக. வளம் தோய்ந்த பழனிமலைச் சிவகுருவே வருக, வருக, வருக.

கலைமகள்: (சரசுவதி)

ஆயகலைகள் அனைத்துக்கும் தெய்வம்; அறிவுத் தெய்வம். இவரது உடை, நிறம், இருக்கை, ஊர்தி அனைத்தும் வெண்மை. இவை தூய அறிவின் குறியீடுகள். வணங்கிக் கலையறிவு பெறுவோம்.

*"பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனும்என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண்நல் காய்உளம் கொண்டுதொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ஓதிமப் பேடே சகல கலாவல்லியே.*

சகலகலாவல்லி மாலை - 7.

கருத்து:

அனைத்துக்கலைகளிலும் வல்லவளே!! மனம் விரும்பி உன் அடியார் தீட்டுவது கலையாகிய இனிய தீம்பால் அமுதம். இவ்வமுதத்தை அவர்கட்கு வழங்குபவள் நீ. அழகு காட்டும்

வெண்மையான பெண் அன்னம் நீ. பாடலும், அதில் அமையும் பொருளும் அப்பொருளால் உயிர்கள் அடைய வேண்டிய அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நால்வகைப்பயனும் என்னிடம்வந்து பொருந்த எனக்கு அருள்புரிவாயாக.

<u>செய்யாள் செந்திரு:</u> (இலக்குமி)

செய் + ஆள், செய் = செய்கை - உழைப்பு, நம் உழைப்பில், உழைப்பின் பயனில் எழுந்தருளியிருப்பவள். உழைப்பின் பயன் பல்வகைச் செல்வம். எனவே இவரைச் செய்யாள்-செந்திரு என்கிறோம். செய்யாள் என்பதே பண்டைவழக்கு. "அகனமர்ந்து செய்யாள் உறையும்" என்பது திருக்குறள். உழைப்பின் பயன் பொலிய இவரைப் போற்றுவோம்.

தண்கமலத்து இருந்துஈசன் அடிக்கமலம் மனக்கமலம்
தன்னில் வைத்து
வண்கமலக் கண்ணானை மணவாளன் எனப்பெறுவான்
மாதவம் செய்து
ஒண்கமலா லயம்எனும்பேர் ஒளியார்ந்த திருவாரூர்க்கு
உவந்து அணிந்த
பெண், கமலம் கைக்கமலம் பிடித்தகொடி தனைத்தொழுது
பெரிது வாழ்வாம்.

- திருவாரூர்ப் புராணம்

<u>கருத்து:</u>

செய்யாள் - திருமகள் - குளிர்ந்த செந்தாமரையில் எழுந்தருளி இருப்பவள்; பரம்பொருளின் திருவடித் தாமரைகளைத் தன் உள்ளத் தாமரையில் வைத்தவள்; வளப்பமான தாமரை போன்ற கருணைக் கண்களையுடைய திருமாலைக் கணவனாகப் பெற வேண்டும் என்று திருவாரூரில் தவம் செய்தவள்; அதன் பயனாகத் திருமாலைத் தன் கணவனாகப் பெற்றவள்; இதனால் ஒளி பொருந்திய கமலாலயம் என்கிற பெயரைத் திருவாரூர்த் திருக்கோயிலுக்குத் தந்தவள்; தன் செந்தாமரை போன்ற

திருக்கையில் செந்தாமரைமலரை ஏந்திய கொடியாவாள் இவரைத் தொழுது பெருவாழ்வு வாழ்வோம்.

<u>கொற்றவை:</u> (துர்க்கை)

கொற்றம் = வலிமை, வெற்றி. பல்வகை வலிமையாற்பெற்ற வெற்றியில் இருப்பவள்; தன்னை நினைவார்க்கு அவற்றை வழங்குகிறவள். துன்பம் துடைத்து இன்பம் ஆக்கிக்கொள்ள வேராய் விளங்கும் வலிமையும் வெற்றியும் பெற வணங்குவோம்.

ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரிஉடுத்துக்
கானத்து எருமைக் கருந்தலைமேல் நின்றாயால்
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யே நிற்பாய்.
சிலம்பு - வேட்டுவவரி.

<u>கருத்து:</u>

கொற்றவையே! தேவர்கள் உன்னை வணங்குவர்; நான்மறைகளுக்கும் மேற்பட்ட மறைபொருள் நீயாவாய்; ஞானக்கொழுந்தாவாய்; ஞானக்கொழுந்தாகலின் எக்காலத்தும் அச்சமின்றி நிலைபெற்றவள். இத்தகுநீ உயிர்களின் நல்வாழ்வுக்காக யானைத்தோல் போர்த்தாய்; புலியின் தோலை உடுத்துக் கொண்டாய்; காட்டெருமைத்தலையுடைய அரக்கன் - மகிடாசுரன் - தலைமேல் திருவடிபதித்து நின்றாய். உன் ஞானத்தின் வழி வந்த வீரத்தை எமக்கும் அருள்க.

<u>அம்மை:</u>

"அப்பனின் திருவருள்வடிவானவர் அம்மை"
"அருளது சத்தியாகும் அரன்தனக்கு"
"அடியார் உள்ளத்து அப்பன் தன்னொடு
அயர்ந்திடும் அன்னை." -

என்கிற அருளாளர்வாக்குகள் இவர்பெருமை உணர்த்தும் அப்பன், அம்மை வழியே தன்னருளாற்றலை வழங்குகிறாள். ஆதலின் அம்மையை வணங்கிப்பின் அப்பனை வணங்குவது மரபு.

இதனை;
"தாயுடன் சென்று தாதையைக் கூடிப்பின் தாயை மறந்து ஏயுமதே நிட்டை"

என்கிற அருள்வாக்கு புலப்படுத்தும். திருவருள் வடிவாம் அம்மையை வணங்கிப் பெரும்பேறு பெறுவோம்.

அ) "தனம்தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவும் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே"

- அபிராமி அந்தாதி-69

<u>கருத்து:</u>

திருக்கடவூரில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அருள்தரு அபிராமி அம்மை, அடர்ந்த மென்மையான கூந்தலுடையவள் கருணையே பெருகும் கடைக்கண் நோக்குடையவள். இவ்வம்மையின் கடைக்கண் நோக்கு, தன்னை வணங்குவார்க்கு இப்பிறவிக் குரிய செல்வம், கல்வி, எக்காலத்தும் தளராதமனம் உள்ளத்தில் வஞ்சனையில்லாத நண்பர் கூட்டம் தரும். மேலும் தேவையான எல்லாம் தரும். மறுமையில் தெய்வ வடிவம் - சாயுச்சிய முத்தி - தரும்.

ஆ) *"பொன்னே வருக மூவுலகும்*
பூத்தாய் வருக நாயேனைப்
புரந்தாய் வருக வழுதியர்கோன்
புதல்வீ வருக முகிற்கு இளைய

மின்னே வருக மெய்ஞ்ஞான
விளக்கே வருக மறைநான்கின்
விரிவே வருக பேரின்ப
விளைவே வருக மிகும்கருணை

அன்னே வருக அகம் நெகுவார்க்கு
அணியே வருக அலர்மடவார்க்கு
அரசே வருக உரைப்பரும்சீர்
அம்மே வருக அழல்கரத்து

மன்நேர் உடலம் பகிர்ந்த இள
மயிலே வருக வருகவே
மதமா தங்க வனத்துமட
மானே வருக வருகவே."

- திருவானைக்கா அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ்

கருத்து:

பெறுதற்கரிய பொருளாக இருப்பவளே வருக; மூன்று உலகங்களையும் ஈன்றவளே வருக; நாய் போன்ற என்னையும் காப்பவளே வருக; மலையத்துவச பாண்டியனின் மகளே வருக; மேகமாக (கரியநிறம், காத்தல்) விளங்கும் திருமாலுக்குத் தங்கையே வருக; மெய்ஞ்ஞான ஒளிவீசும் விளக்கே வருக; நான் மறைகளின் விரிபொருளே வருக; பேரின்பப் பெருவாழ்வின் பயனாக உள்ளவளே வருக; உயிர்க்குலத்தின் மீது மேன்மேலும் கருணை பொழியும் தாயே வருக; உளம் நெகிழ்ந்து உருகும் அடியவர்களின் அணிகலனாக விளங்குகின்றவளே வருக; வெண்டாமரையில் எழுந்தருளியுள்ள கலைமகளுக்கும், செந்தாமரையில் எழுந்தருளியுள்ள திருமகளுக்கும் அரசியே வருக; சொல்லுதற்கரிய புகழ்வாய்ந்த தாயே வருக; அனலைக் கரத்தில் ஏந்திய தலைவனாகிய - நிலைத்தவனாகிய - சிவபரம்பொருளின் திருமேனி இடப்பாகத்தைத் தனக்குப் பகிர்ந்து கொண்ட இளமயிலே வருக; மதமாதங்கவனம் ஆகிய திருஆனைக்காவில் எழுந்தருளி அருள் பொழியும் அகிலாண்ட நாயகியாகிய இளமானே அருள்புரிய வருக வருக.

இ) *"சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல் போற்றி; உத்தரியத்*
தொடித்தோள் போற்றி;
கரும்புருவச் சிலை போற்றி; கவுணியர்க்குப் பால்சுரந்த
கலசம் போற்றி;
இரும்புமனம் குழைத் தென்னை எடுத்தாண்ட
அங்கயற்கண்
எம்பி ராட்டி
அரும்பும்இள நகைபோற்றி; ஆரணநூ புரம்சிலம்பும்
அடிகள் போற்றி."

- திருவிளையாடற் புராணம்

<u>கருத்து:</u>

இரும்பு போன்ற வன்மையான என் மனத்தை நெகிழச் செய்து, என்னை மலத்திலிருந்து எடுத்து ஆட்கொண்ட எம்தலைவியாகிய அங்கயற்கண்ணம்மையே; வண்டுகள் முரலும் மணம்மிக்க மலர்சூடிய மென்மையான கூந்தலுடையவளே வணக்கம்; உத்தரியம் (மேலாடை) போர்த்திய தோள்வளை அணிந்தவளே வணக்கம்; கரிய புருவமாகிய விற்களையுடையவளே வணக்கம். கவுணியர் கோத்திரத்தில் உதித்த திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் சுரந்தளித்த திருமார்புகளுடையவளே வணக்கம்; அரும்பும் இளமுறுவல் உடையவளே வணக்கம்; மறைகளாகிய சிலம்பு ஒலிக்கும் திருவடிகளுடையவளே வணக்கம். எமக்கு அருள்புரிக.

(போற்றி = வணக்கம்; காப்பாயாக)

ஈ) *பெருந்தேன் இறைக்கும் நறைக்கூந்தல்*
பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப்
பெம்மான் முக்கண் சுடர்க்கிடுநல்

விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைந்த பரமா னந்தத்தின்
விளைவே வருக பழமறையின்

குருந்தே வருக அருள் பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கு ஓர்

மருந்தே வருக பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் - வருகை:10

கருத்து:

பெருந்தேனீக்கள் முழங்கும் மணக்கின்ற கூந்தல் உடைய பெண்யானை ஒப்பநடப்பவளே; முழுமையான ஞானப் பெருக்காய் உள்ளவளே; பிறையைத் திருச்சடையில் சூடிய பரம்பொருளின் முக்கண் சுடர்களுக்கு அவன் இடும் விருந்தானவளே; படைத்தல் தொழிலின் முதற்பொருளாம் அயன், காத்தல் தொழிலின் முதற்பொருளாம் அரி, அழித்தல் தொழிலின் முதற்பொருளாம் அரன் ஆகிய மூவர்க்கும் வித்தாக உள்ளவளே; மூலமின்றியே விளைந்த மேலான இன்பத்தின் விளைவே; பழைமையான மறைகளின் குருந்தே; திருவருள் ஆகிய கனி கனிந்த கொம்பே; உன் திருக்கடைக் கண்ணில் பெருகும் கருணையாகிய பெருவெள்ளத்தில் திளைப்பவரின் பிறவியாகிய பெரிய நோய்தீர்க்கும் மருந்தே; குதலை மழலை பேசும் மிக இளைய கிளியே; மலையத்துவச பாண்டியன் பெற்ற பெருவாழ்வாக விளங்குகிறவளே அருள்புரிய விரைந்து வருக.

கூத்தப் பிரான்: (நடராசர்)

திருவைந்தெழுத்தின் வடிவானவர் இவர், தமது திருக்கூத்தின் மூலம் ஐந்தொழில் புரியும் அம்பலவாணர்.

"தோற்றம் துடியதனில்; தோயும் திதி அமைப்பில்;
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்:- ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு" -

உண்மைவிளக்கம்-36

(உடுக்கையில் உண்டாவது படைத்தல்; அபயத் திருக்கரத்தது காத்தல்; பிறிதொருகை தீயின் கண்ணது அழித்தல்; ஊன்றிய திருவடி இடத்தது மறைத்தல்; தூக்கிய திருவடியிடத்தது அருளுதல்)

உலகைத் தொழிற்படுத்தும் ஊனநடனமும், ஞானியர்க்கருளும் ஞானநடனமும் ஆகிய இரண்டிற்கும் உரியவர்; அருளுருவான அம்மை அருகிருந்து இவராடல் கண்டருள்வாள்; பதஞ்சலி, வியாக்கிரபாதர் போற்றும் திருக்கோலம். கடையூழியில் வரும் தனிமை கழிக்கத் திருவாசகத்தின் ஒரு பிரதியைக் கருதிய பெருமான் இவர் என்பர் மனோன்மணீயம் சுந்தரனார். ஐந்து - பேரறிவும் கண்களே கொள்ளப்பரவுவோம்.

ஆ) *குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயில்*
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில்
பால்வெண் ணீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற் பாதமும்
காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த
மாநி லத்தே

-அப்பர் - கோயில் - 4

<u>கருத்து:</u>

தில்லையில் எழுந்தருளியுள்ள அருள் வழங்கும் அருள்தரு கூத்தப் பிரானின் வளைந்த புருவத்து அழகையும்; கொவ்வைக் கனிபோன்று சிவந்த இதழ்களில் அரும்பும் குமிண் சிரிப்பின் அழகையும்; பவளம் போன்று சிவந்த திருமேனியில் பூசியுள்ள பால் வெள்ளைத் திருநீற்றின் அழகையும்; இனிமை தோன்றத் தூக்கிய அழகிய திருவடியின்அழகையும் என்றென்றும் கண்டு களிக்கும் பேற்றை உயிர்கள் பெறவேண்டும். இதன் பொருட்டு மனிதப்பிறவியும் வேண்டும்.

ஆ) *"படைக்கல மாகஉன் நாமத்து எழுத்து அஞ்சுஎன்*
நாவிற்கொண்டேன்
இடைக்கலம் அல்லேன் எழுபிறப் பும்உனக்கு
ஆட்செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித்தூ
நீறுஅணிந்து உன்
அடைக்கலம் கண்டாய் அணிதில்லைச் சிற்றம்
பலத்தரனே"

அப்பர் - 4 கோயில்- 8

கருத்து:

அழகிய தில்லைச் சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ள சிவமே; என் உயிர் ஈடேற்றத்துக்குரிய படைக்கலமாக உன் திருநாமமாகிய திருவைந்தெழுத்தை என் நாவில் இடையறாது கொண்டு போற்றுகிறேன்; நான் வெறும் மட்பாண்ட மல்லன்; உனக்குப் பிறவிகள் தோறும் அடிமையாய்த் தொண்டு புரிவேன்; நீ என்னை விலக்கினாலும் நான் உன்னை விலகேன்; உன்னைக் கும்பிட்டும் வணங்கியும் உன் திருவருள் திருநீறு அணிந்து என்றென்றும் உன் அடைக்கலமாகவே வாழ்வேன்; அருள்புரிக.

இ) *பால்காட்டும் ஒளிவண்ணம் படிகமணி மலையே*
பந்திக்கும் நிலைதனிலே தித்திக்கும் பழமே
சேல்காட்டும் விழிக்கடையால் திருவருளைக் காட்டும்
சிவகாம வல்லிமகிழ் திருநடநா யகனே
மால்காட்டி மறையாதுஎன் மதிக்குமதி ஆகி
வழிகாட்டி வழங்குகின்ற வகையதனைக்
காட்டிக்
கால்காட்டிக் காலாலே காண்பதுவும் எனக்கே
காட்டி அருள் கருணைக்குக் கைம்மாறு
ஒன்று இலனே."

வடலூர் வள்ளற் பெருமான்.

கருத்து:

தூய்மையே காட்டும் ஒளி அழகுடைய படிகமணியாகிய மலையே; என் உள்ளத்தில் உன்னைக்கட்டிச் சேர்த்த அளவில் தித்திக்கின்ற அருட்பழமே; கெண்டை மீன்போன்ற விழியின் கடைக்கண் நோக்கால் உயிர்களுக்குத் திருவருளை வழங்கும் சிவகாம வல்லித்தாய் மகிழ் திருநடனமிடும் தலைவனே; வேட்கை தந்து மறையாமல் என் அறிவுக்கு அறிவாகி உன்னையடையும் வழியும் காட்டி, உன் திருவருளை நீ வழங்கும் வகையும் காட்டி, உன் திருவருளை வழங்கி, அத்திருவருளால் நான் அடையவேண்டிய பேற்றினையும் எனக்குக் காட்டி அருள்புரிந்த உன் பெருங்கருணைக்கு என்னால் கைம்மாறு (பதிலுதவி) செய்தல் இயலாது.

அப்பன் (சிவக்கொழுந்து - சிவலிங்கம்)

இறைவன் நம்பொருட்டு மேற்கொண்ட மூவகைத் திருமேனிகளுள், இலிங்கத் திருமேனி அருவுருவநிலை. பிற இரண்டும் உருவ, அருவநிலை. தமிழரின் தொன்மையான வழிபாட்டுத் திருமேனி சிவலிங்கத் திருமேனி. இதன் பீடம், ஆற்றலின் குறியீடு; மேல் நோக்கி எழும் பாணம் ஞானத்தின் குறியீடு. அறிவைத்தாங்கும் ஆற்றலும், ஆற்றாலொடு இணைந்த அறிவுமே வாழ்வியல் என்பது இதன் தத்துவம்.

"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீள் நாகம் அணிந்தார்க்கு நிகழ் குறியாம் சிவலிங்கம்"

என்பது தெய்வச் சேக்கிழார் வாக்கு.

பெருமானை வணங்கி ஞானமும் ஆற்றலும் இவற்றின் பயனாகிய அன்பும் வீடுபேறும் பெற்றுச் சிறப்போம்.

அ) *"நன்றுடை யானைத் தீயதில் லானை நரைவெள்ளேறு*
ஒன்றுடை யானை உமையொரு பாகம் உடையானைச்
சென்றடை யாத திருவுடை யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக் கூறஎன் உள்ளம் குளிரும்மே".

திருஞானசம்பந்தர் திருமுறை -1

<u>கருத்து:</u>

திருச்சிராப்பள்ளிக் குன்றில் எழுந்தருளி அருள்வழங்கும் பெருமான், நல்லனவே உடையவன்; தீமையே இல்லாதவன்; தூய வெண்மையான எருதினை ஊர்தியாகவும் கொடி இலச்சினையாகவும் (சின்னம்) உடையவன்; உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் உடையவன்; அயன் அரிமுதலிய தேவர்களாலும் சென்று அடையவியலாத திருவுடையவன். இப்பெருமானைப்பற்றி நான் கூறிய அளவிலேயே உள்ளம் குளிரும்.

ஆ) *"எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்அடியார்க்கு*
இங்கேஎன்று அருள்புரியும் எம்பெருமான் எருதுஏறிக்
கொங்குஏயும் மலர்ச்சோலைக் குளிர்பிரம
புரத்துஉறையும்
சங்கேஒத்து ஒளிர்மேனிச் சங்கரன்தன் தன்மைகளே".

திருஞானசம்பந்தர் திருமுறை - 2

<u>கருத்து:</u>

தேன்பொருந்திய மலர்ச் சோலைகளால் குளிர்ச்சி பொருந்திய பிரமபுரம் என்கிற சீர்காழியில் எழுந்தருளி அருள்வழங்கும் பெருமான், சங்கு போன்று ஒளிவீசும் திருமேனியுடைவன்; இன்பம் தருகிறவன் என்கிற பொருள்தரும் சங்கரன் என்னும் திருப்பெயர் உடையவன்; தன் அடியார் உலகில் எங்கே எவ்வடிவில் பிறந்திருந்தாலும், "இதோ வந்துவிட்டேன்" என்று குரல் தருதலும் அங்குத் தன் விடை மீது ஏறி விரைந்து செல்லுதலும் அவர்கட்கு அருள்புரிதலும் ஆகியன இவன் இய்ல்புகளாகும்.

இ) *"மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்*
எண்ணில்நல் லகதிக்கு யாதும்ஓர் குறைவிலை
கண்ணில்நல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாலொடும் பெருந்தகை இருந்ததே".

திருஞானசம்பந்தர் திருமுறை -3

கருத்து:

கழுமலவளநகராகிய சீர்காழியில், பெண்ணின் நல்லாளாகிய உமையம்மையுடன் பெருந்தகையாகிய பெருமான் எழுந்தருளியுள்ளான். இவனை நாம் நாடோறும் நினைக்க, இவன் திருவருளால் நாம் இவ்வுலகில் நல்லவாறு வாழலாம்; வாழ்நாள் எல்லாம் நம் கண்ணில் நல்லனவே தென்படும்; மேலை நெறியாகிய வீட்டின்பத்துக்கும் யாதும் ஒரு குறைவும் இல்லை.

ஈ) *"தந்தையாய்த் தாயும் ஆகித்*
தரணியாய்த் தரணி உள்ளார்க்கு
எந்தையும் என்ன நின்ற
ஏழ்உலகு உடனும் ஆகி
எந்தைஎம் பிரானே என்று என்று
உள்குவார் உள்ளத்து என்றும்
சிந்தையும் சிவமும் ஆவார்
திருப்பயற் றூரர் தாமே"

அப்பர் திருமுறை -4

கருத்து:

திருப்பயற்றூர்ப்பெருமான்; உலகமாகவும், உலக உயிர்க் குலத்துக்குத் தந்தையாகவும் விளங்குகிறவன்; ஏழ் உலகங்களாகவும் விளங்குகிறவன். இவனை எம் தந்தை, எமக்குத் தலைவன் என்று நினைப்பவர்க்கு இவன் தந்தையும் தாயும் ஆகித் தாங்குவான்; அவர்களது சிந்தையாகவும், அதில் எழுந்தருளி அருள்புரியும் சிவமாகவும் விளங்கி அருள்புரிவான்.

உ) *"மருந்தி னோடுநற் சுற்றமும் மக்களும்*
பொருந்தி நின்றுஎனக்கு ஆயஎம் புண்ணியன்
கருந்தடங் கண்ணி னாள்உமை கைதொழ
இருந்த வன்கச்சி ஏகம்பத்து எந்தையே."

அப்பர் திருமுறை -5

கருத்து:

கரிய அகன்ற கண்களையுடைய உமையம்மை கைகூப்பிவணங்க எழுந்தருளியிருப்பவன் காஞ்சிபுரத்து ஏகம்பன். இவன் எமக்குத்தந்தை; எமக்கு மருந்தாகவும், அல்லது அமுதமாகவும், சுற்றத்தாராகவும், நன்மக்களாகவும் பொருந்தியவன்; புண்ணியமே வடிவானவன் ஆவான்.

ஊ)

"வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை ஏற்றான் தன்னைச்
சுடர்த்திங்கள் சடையானைத் தொடர்ந்து நின்றுஎன்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க்கு என்றும்
சேயானைத் தென்கூடல் திருஆ லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே".

அப்பர் திருமுறை -6

கருத்து:

அழகிய மதுரைத் திருஆலவாயில் எழுந்தருளியுள்ள பெருமான்; என்சொல்லாக, என்மனமாக, என்மனக்கருத்தாக இருந்து என் கருத்தை அறிந்து நிறைவேற்றுகிறவன்; தூயவன்; தூயவெண்மையான ஏற்றினை ஊர்தியாகவும் வெற்றிக்கொடியாகவும் கொண்டவன்; ஒளிரும் பிறையைச் சடையில் சூடியவன்; என்னைப் பின்தொடர்ந்து நின்று எனக்குத் தாயாக உதவுகின்றவன்; ஆயினும் தலைசிறந்த தேவர்களுக்கும் தேவர்தலைவர்களுக்கும் எட்டாதவன். இப்பெருமானுடைய திருவடிகளை என் மனத்தில் நிறுத்திச் சிந்திக்கும் பேறுபெற்றேன்.

எ) "பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாம்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி ஒண்ணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயல்பழ னத்துஅணி
ஆரூ ரானை மறக்கலும் ஆமே".

சுந்தரர் திருமுறை -7

<u>கருத்து:</u>

அன்னப் பறவைகள் வாழும் வயல் சூழ்ந்த அழகிய திருவாரூர்ப் பெருமான்; இம்மைக்குரிய பொன்னும்; மறுமைக்குரிய செல்வமாகிய திருவருளையும் ஒருசேரத்தருகின்றவன்; இம்மையில் நல்லனுபவத்தையும் மறுமையில் வீட்டின்பத்தையும் கூட்டுவிக்கின்றவன்; இவை மட்டுமன்றி நான் இது வரை செய்த பிழைகளைப் பொறுத்தாள்பவன்; இனி இத்தகு பிழைகள் நிகழாதவாறு என்னைத் தடுத்தாட்கொள்பவன்; இப்படிப்பட்ட தன்மையுடையவன் என்று சுட்டியறிய இயலாத எங்கள் தலைவன், எனக்கு எளிதில் உதவ முன் வந்த தலைவன். இப்படிப்பட்டவனை மறக்கவும் இயலுமோ? மறக்கவியலாது.

ஏ) "உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அரு
ளைப்புரி யாய்பொன் அம்பலத்துஎம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்நின்றே".

மாணிக்கவாசகர் திருமுறை -8

<u>கருத்து:</u>

தில்லைப் பொன்னம்பலத்து எழுந்தருளி அருள் வழங்கும் முடிவே இல்லாத எமது தலைவனே; எல்லாவற்றையும் தமது உடைமையாக உடைய அம்மை, முற்றழிப்புக் காலத்தில் உன் நடுவில் இருப்பாள்; அம்மை ஐந்தொழில் நிகழ்த்தும் நிலையில் நீ அவளுள் இருந்து இயக்குகிறாய். உன் அடியவனாகிய என் உள்ளத்தில் நீவிர் இருவரும் இருப்பது உண்மையானால், அந்நிலை தளராதிருக்கும் பொருட்டு நான் உன் நல்லடியார் கூட்டத்து நடுவில் எப்பொழுதும் இருக்கும் அனுபவநிலையை எனக்கு வழங்குக. என் இவ்வேண்டுகோளை நிறைவேற்றியருள்க.

சி - பெருமானைக் குறிக்கும் எழுத்து

வ - பெருமாட்டியைக் குறிக்கும் எழுத்து

சிவசிவ என்கிற மந்திரத்தில் வகரம் (வ) சிகரங்களுக்கு (சி) இடையிலும்; சிகரம் (சி) வகரங்களுக்கு இடையிலும் அமைந்துள்ளமை எண்ணுக.

"அடியேன் மனத்துள் இருவீரும் இருப்பது" என்பது, சிவசிவமந்திரம் என் இதயத்தின் ஆழத்தில் பதிந்துள்ளதைக் குறிப்பதாகும்.

(இது, தண்டபாணி விருத்தியுரையிற் கண்ட அரிய கருத்து).

ஐ) *"கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்*
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுஉள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே."

சேந்தனார் திருவிசைப்பா திருமுறை -9

கருத்து:

திருவீழி மிழலையில் வீற்றிருந்து அருள்வழங்கும் பெருமான்; கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியாவான்; எல்லை இல்லாத கருணைப் பெருங்கடல் ஆவான்; இவ்னை மதியாதார் அறியா மாணிக்கமலை யாவான்; மதிப்பவர் மனத்தில் ஒளிவீசும் மணிவிளக்காவான்; உயிர்ப்பகைவர்களாகிய முப்புர அசுரர்தம் முப்புரம் அழித்த எம் சிவனாவான்; வெற்றி மிக்கவனாவான். அவனைக் கண்ணாரக் கண்டு கண்டு என் உள்ளம் குளிர்ந்ததால் என்கண்களும் குளிர்ந்தன.

ஓ. *"சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன்*
சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற தார்பெறு
வார் உலகில்
ஊரும் உலகும் கழற உளறி உமைமண
வாளனுக்குஆள்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு
கூறுதுமே."

சேந்தனார் திருப்பல்லாண்டு திருமுறை -9

கருத்து:

நன்மையும் தெய்வத்தன்மையும் பொலிவுபெற நான், சிவலோக நாயகன் சேவடிக்கீழ் வாழ்வுதால் இவ்வுலகில் பிறர் யாரும் பெறாத ஞானம் பெற்றேன். நான் பெற்றது ஆர் பெறுவார்! ஊரவரும் உலகவரும் தத்தம் போக்கில் உறுதி கூறவும், உரத்த குரலில் உமையம்மை மணவாளனுக்கு நாங்கள் அடிமை என்கிற செய்தியை உலகவரும் வானத்தவரும் அறியும்படி இப்பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோம்.

ஓ) *"போற்றிஎன் பார்அம ரர்புனி தன்அடி*
போற்றிஎன் பார்அசு ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்மனி தர்புனி தன்அடி
போற்றிஎன் அன்புள் பொலியவைத் தேனே".

திருமூலர் திருமுறை -10

கருத்து:

புனிதனாகிய சிவபெருமான் திருவடிகளுக்கு வணக்கம் என்று தேவர்களும் அசுரர்களும் பிற மனிதர்களும் வணங்குவர். நான் அப்புனிதனுக்கு வணக்கம் செலுத்தி, நான் பொலிவுபெற என் அன்பு மனத்தில் இவனை எழுந்தருளச் செய்தேன்.

(இங்கு வணக்கம் (போற்றி) என்பது புறவழிபாட்டையும், அன்புள் பொலிய வைத்தல் அகவழிபாட்டையும் குறிக்கும். புறவழிபாட்டினும் அகவழிபாடே சிறந்தது).

ஔ)
"ஒளிவந்த வா,பொய் மனத்துஇருள் நீங்கஎன் உள்ளவெள்ளம்
தெளிவந்த வா,வந்து தித்தித்த வா, சிந்தி யாதது ஒரு
களிவந்த வா,அன்பு கைவந்த வா, கடை சார் அமையத்து
எளிவந்த வா,நம் கழுமல வாணர்தம் இன்னருளே".

பட்டினத்தார் திருமுறை -11

கருத்து:

சீர்காழிப் பதியில் எழுந்தருளி அருள் வழங்கும் பெருமானின் இனிய திருவருளால் எனக்கு ஞானம் உதித்தவாறு என்னே! பொய்யான உள்ளத்து இருள் நீங்கி என் மனமாகிய வெள்ளம் தெளிந்தவாறு என்னே! இதற்குக் காரணமான திருவருள் இனித்தவாறு என்னே! நினைப்பதற்கரிய ஒப்பற்ற களிப்பு வந்தவாறு என்னே! என் அன்பு, அனுபவத்தில் ஆனவாறு என்னே! கடைசி நேரத்திலும் கூடபெருமான் எனக்கு எளிதில் அருள் புரிந்தவாறு என்னே! பெருமான் திருவருள் எனக்கு இருந்தவாறு இது!

க)

"ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோற்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி".

சேக்கிழார் திருமுறை - 12

கருத்து:

தில்லைப் பொன்னம்பலத்தில் பெருமான் புரியும் நடனம், அனைத்துயிர்களின் ஈடேற்றத்துக்கும் பொதுவானது; அனைத்துக்கும் ஆதியானது; நடுவானது; மனத்தால் எண்ணிப்பார்த்து அளவிடற்கு இயலாத பெருமையுடையது; ஒளிவடிவானது; உணர்வுமயமானது; தோற்றிய எல்லாப் பொருளும் ஆனது; அப்பொருள்களை விட்டு வேறுபட்டு நிற்கும் வேறுபாடில்லாதது; ஒன்றேயானது; சத்தியும் சிவமும் ஆனது; என்றென்றும் பரஞானத்தையே உபதேசிப்பது ஆகிய இத்தகு திருநடனம் புரியும் திருவடிகட்கு என் வணக்கம் நான் அடைக்கலம்.

போற்று + இ = போற்றி = அடைக்கலம்
போற்றி = வணக்கம்.

கா)

"வானே நிலனே கனலே மறிபுனலே
ஊனேஅவ் வூனில் உயிரே உயிர்த்துணையே
ஆனேறும் ஏறே அரசே அருட்கடலே
தேனே அமுதே அளியோங்கள் செல்வமே
யானே புலனும் நலனும் இலனன்றே
ஆனாலும் என்போல்மற்று ஆர்பெற்றார் அம்பலத்துள்
மாநா டகம்காணும் வாழ்வு".

குமரகுருபரர் சிதம்பரச் செய்யுட்கோவை - 22

கருத்து:

தில்லை அம்பலத்தரசே நீ வானாக, நிலனாக, தீயாக, சுருண்டுவீழும் அலைகளையுடைய கடலாக (நீர்) உடம்பாக, உடம்பில் உறையும் உயிராக, அவ்வுயிர்க்கு உற்றதுணையாக உள்ளாய். விடை ஏறும் ஆண்சிங்கமே, அனைவர்க்கும் அரசே, அருட்கடலே, தேனே, அமுதே, உன் கருணை பெறுதற்குரிய எங்களுக்கு வாய்த்த செல்வமே, நான் நல்லனவாகிய ஐம்புலன்களும் நலங்களும் இல்லாதவன். எனினும், பொன்னம்பலத்துள் உன் திருக்கூத்தைக் கண்டு களிக்கும் பேற்றினை என் போல் பிறர் யார் பெற்றார். நானே பெறும் பேறு பெற்றேன்.

கி)

"கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்புஅருளும் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண் அளிக்கும் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரம்அளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலம்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில்நடம் இடுகின்ற சிவமே
என்அரசே யான்புகலும் இசையும் அணிந்து அருளே"

வடலூர் வள்ளற்பெருமான்.

கருத்து:

என்தலைவனே! நீ கல்லாதவர் கற்றவர் என்கிற வேறுபாடின்றி அனைவர்க்கும் பேரின்பம் அருளும் பேரின்ப வடிவானவன்; உன்னைத்தம் மனத்துள் கண்டு போற்றுகிறவர் தம் மனத்துள் காணாதவர் என்கிற வேறுபாடின்றி அனைவருக்கும் கருணைவழங்கும் கருணை வடிவானவன்; வீடுபேறடைய வல்ல ஞானியர்க்கும் அவ்வல்லமை இல்லார்க்கும் மேலான வீடுபேறளிக்கும் வீடுபேறானவன்; உன்னை மதித்து வாழ்வார்க்கும் அங்ஙனமல்லாதவர்க்கும் ஞானம் வழங்கும் ஞானவடிவானவன்; நல்லடியார்க்கும் நல்லவரல்லாதார்க்கும் அவரவர்க்கு ஒத்தநிலையில் அருள்புரியும் நடுநிலை வடிவானவன்; நரர்களுக்கும் தேவர்களுக்கும் நலம் செய்யும் நலமே வடிவானவன்; இங்ஙனம் எல்லா உயிர்கட்கும் பொதுவான நிலையில் அருட்கூத்தியற்றும் சிவபரம்பொருளே; நான் சூட்டும் இப்புகழ் பாமாலையை ஏற்று எனக்கு அருள்புரிவாயாக.

அம்மை அப்பன் முருகன். (சோமாஸ்கந்தர்)

அறிவு ஆற்றல் அன்பு மூன்றும் கூடிக்குலவிடும் திருக்காட்சி இது. உலக இயக்கத்திற்கு இம்மூன்றும் இன்றியமையாதன. இத்திருக்கோலம் வழுத்தி இம் முப்பேராற்றலும் பெறுவோம்.

"செல்வியைப் பாகம் கொண்டார்
சேந்தனை மகனாக் கொண்டார்
மல்லிகைக் கண்ணி யோடு
மாமலர்க் கொன்றை சூடிக்
கல்வியைக் கரையி லாத
காஞ்சிமா நகர்தன் உள்ளால்
எல்லியை விளங்க நின்றார்
இலங்குமேல் தளிய னாரே".

அப்பர் திருமுறை -4.

கருத்து:

கல்வியின் கரைகண்ட பேரறிஞர் வாழும் காஞ்சி மாநகரத்தில் விளங்குவது கச்சிமேற்றளி. (இன்றைய பிள்ளை பாளையம்) இங்கு எழுந்தருளியுள்ள பெருமான், மல்லிகை மாலையுடன் சிறந்த கொன்றைமலர் மாலையும் சூடியவர். உயிர்களுக்கு அருள்புரிய இப்பெருமானே உமையம்மையைத் தன் இடப்பாகம் கொண்டு முருகப்பெருமானைத் தன் மகனாகக் கொண்டார். ஞாயிற்றை ஒளியுடன் விளங்கச்செய்தார். இரவை நிலவு விண்மீன்களால் விளங்கச் செய்தார். (எல்லி = ஞாயிறு இரவு).

ஒன்பான்கோள்: (நவக்கிரகம்)

ஒன்பான்கோள் வழிபாடு பண்டைத் தமிழ் மரபன்று. "நாள்கள் அவைதாம் அன்பொடு நல்ல நல்ல அடியார் அவர்க்குமிகவே", "உருமொடு மின்னும் மிகையான பூதம் அவையும் அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே" முதலியன திருஞான சம்பந்தப்பெருமான் அருளிய திருமுறை வாக்கு. எனினும் நடப்பில் ஒன்பான்கோள் வழிபாடு உள்ளதால் திருமுறை ஓதிநலம் பெறுவோம்.

"வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே".

திருஞானசம்பந்தர் திருமுறை 2 : 1.

வேயுறுதோளி = மூங்கில் போன்ற திருத்தோள்களுடைய உமையம்மை

பாம்பிரண்டு = இராகு கேது, ஆசறு நல்ல நல்ல = குற்றமற்ற நன்மைகளையே செய்வன.

<u>சண்டேசர்:</u>

சிவபூசையைத் தடை செய்த தந்தைதாள் அற் எறிந்தவர். "தொண்டர் தமக்கு அதிபர்". சிவவழிபாட்டின் செழும் பயனை நமக்குக் கூட்டுவிப்பவர். வழிபாட்டினால் நாம் பெற்ற களிப்பு வெளிப்படக் கைகொட்டி வணங்குதல் மரபு என்பர். (இவரது நிட்டைகலையாதவாறு மெல்லக் கைபொலி எழுப்புதல் வேண்டும். நூல் முதலியன இடுதல் தகாது.)

"பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த
புனிதர்க்கு அமைக்கும் பொருளன்றி
மின்னும் கலன்ஆ டைகள் பிறவும்
வேறு தமக்கென்று அமையாமே
மன்னும் தலைவன் பூசனையின்
மல்கும் பயனை அடியார்கள்
துன்னும் படிபூ சனைகொள்ளும்
தூயோன் அடித்தா மரைதொழுவாம்".

<u>கருத்து:</u>

தூய்மையேவடிவானவர் சண்டேசர். இவர் தமக்கென்று எதனையும் அமைத்துக் கொள்ளாதவர். பொன்போலும் அழகிய கொன்றை மாலையினைத் தமது திருமுடியில் சூடிய புனிதராகிய சிவபெருமானுக்கு நிவேதனமாக அமைந்த பொருள்களையே ஏற்பவர்; அவர் அணிந்த ஒளிவீசும் திருவாபரணம், திருப்பரிவட்டம் முதலிய பிறவற்றையுமே தாம் ஏற்பவர். என்றும் நிலைபெற்ற பரம்பொருளைப் பூசனை புரியும் அடியார்களுக்குரிய சிவபுண்ணியத்தை அவரவர் அடைவதற்காக வணங்கப் பெறும் சிறப்புடையவர், இவரது திருவடித் தாமரைகளை வணங்குவோம்.

வைரவர்:

தேவர் செருக்கறுத்த்வர்; திருக்கோயில் காவல் பூண்டவர்; உலகியல் தீங்குகளிலிருந்து உயிர்க்குலம் காப்பவர்; இன்பத்தில் நிறுத்துகிறவர். ஆபத்துத்தாரணர் என்பர். ஆபத்துகளிலிருந்து எடுத்து நலத்தில் நிறுத்துகிறவர் என்பது இதன் பொருள். வணங்கித் தீதகன்று நலமே பெறுவோம்.

"*கலையாத முத்தமிழ்க் கல்வியும் ஞானமும் காசினியில்*
நிலையா கியபெருஞ் செல்வமும் நீதியும் நீ அருள்வாய்
மலையா சனவடு கேசகங் காள வயிரவனே
தலைமாலை சூழ்புய னேகாழி ஆபத்துத் தாரணனே".

கருத்து:

வைரவமூர்த்தியே, மலையைத்தன் இருக்கையாகக் கொண்டவரே; பிரமசாரியே; எலும்புக்கூட்டை மாலையாகத் தரித்தவரே; தலைமாலை சூழும் திருத்தோள்களுடையவரே; சீர்காழியில் எழுந்தருளி அடியார்களை ஆபத்துகளாகிய தீமைகளின் நீக்கி எடுத்து நலத்தில் நிறுத்துகிறவரே; எமக்கு இவ்வுலகில் எக்காலத்தும் கலையாத முத்தமிழ்க் கல்வியும்; அதனால் அடையும் ஞானமும்; என்றும் இவ்வுலகில் அழியாத பெருஞ்செல்வமும்; நீதி நெறியும் அருள்புரிவீராக.

விடைபெறுதல்:

திருக்கோயில் முன்மண்டபத்தில் அமர்ந்து, பரம்பொருளை நெஞ்சமுழுத்தித் திருவைந்தெழுத்தை உளங்கொண்டு மந்திர முறையில் - உதடசையாமல்-ஓதி வணங்கி விடைபெறுவோம்.

"*என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்*
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று ளார்அடி யார்அவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலாவி உலகெலாம்".

- பெரியபுராணம்

கருத்து:

என்றென்றும் இன்பமே பெருகவேண்டும் என்கிற இயல்புகாரணமாக, மனம் ஒன்றிய நிலையில் அன்பு செலுத்த, அதனால் உள்ளம் - ஆற்றல் - பெருகி ஓங்க, பொன்னம் பலத்தார் அவர் அடியார் ஆகியோர் மேலான புகழ் உலகெங்கும் பரவி உலகில் நிலைபெற்றது.

வீட்டிற்கு வந்ததும் இல்லுறை தெய்வத்தை வணங்கி நிறைவு பெறுவோம்.

திருச்சிற்றம்பலம்

உ

மாதப்பதிகம்; வாரப்பதிகம்

வித்துவான்.க. கதிரேசன் எம்.ஏ., பி.எட்.,
குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனப்புலவர்
குன்றக்குடி 630 206.

மாதப்பதிகம்

கட்டளைக் கலித்துறை

1. புத்தாண் டிதனில் நலங்கள் பொலியப் பொருள்களினால்
எத்திக் கிலுமே இனிமை பெருக மனம்உனையே
நத்திக் கிடக்கும் நிலைதந்(து) உயர்த்திமேல் நன்மைதரச்
சித்திரை மாதம் **வருவாய்குன் றக்குடிச் சண்முகனே.**

2. மெய்காவ லாகஇம் மேதினி காக்கின்ற மெய்ப்பொருளே
கைகாட்டி உன்னரும் கண்காட்டிப்புன்னகை சேர்இதழின்
செய்காட்டித் தாமரைத் தாள்காட்டி இங்(கு)எமை
ஆட்கொளவே
வைகாசி மாதம் **வருவாய்குன் றக்குடிச் சண்முகனே.**

3. மேனிலை எய்தியே மேன்மேல் உயர்(வு)உற மெய்யன்பிலே
நானிலை காண நலமார் வழியினில் நல்லுணர்வில்
தானிலை கொள்ளநல் தண்ணளி செய்கின்ற தாய்எனவே
ஆனிநன் மாதம் **வருவாய்குன் றக்குடிச் சண்முகனே.**

4. ஓடித் திரிந்(து)ஓர் கிளைவிட்டுத் தாவிக் களைத்ததனால்
வாடி இளைத்த குரங்கது வாகாமல் நன்மனத்தால்
நாடிப் பிடித்(து)உன் நலம்தரு பாதம் நயந்திடவே
ஆடிநன் மாதம் **வருவாய்குன் றக்குடிச் சண்முகனே.**

5. பூவணி மாலை பொழுதிலே வாடிடும் ஆகையினால்
பாவணி மாலை தொடுத்(து)அணி வித்தேன்
பரிந்(து)உனக்(கு)என்
மாவணி ஆகிய வாடா மலர்த்தாளைச் சூட்டிடவே
ஆவணி மாதம் **வருவாய்குன் றக்குடிச் சண்முகனே.**

6. அரற்றி அலறியே ஆடியும் பாடியும் உன்திருத்தாள்
உரமாய்ப் பிடிக்க வழியறி யேற்(கு)ஓர் வழிபுதிய
வரவாய் வழங்கியே வாழ்விக்க உள்ளம் நீ கொண்டருளிப்
புரட்டாசி மாதம் **வருவாய்குன் றக்குடிச் சண்முகனே.**

7. எப்பொரு ளோ(டு)என் உடலும் உயிரும்நீ என்பதனால்
மெய்ப்பொருள் நீஎனும் மேன்மை உளங்கொண்டு
மேதினியில்
கைப்பொருள் நீயேஎன் எய்ப்பினில் வைப்பும்நீ என்(று)
அமைவேன்
ஐப்பசி மாதம் **வருவாய்குன் றக்குடிச் சண்முகனே.**

8. ஆர்த்தெழும் ஆழி உலகினை அங்கண் அருளதனால்
போர்த்(து)யிர் தம்மை எளிதில் புரக்கும் நினக்(கு) அரிதோ
சீர்பெற என்னையும் காத்(து)அருள் செய்வாய்
அருள்வடிவே
கார்த்திகை மாதம் **வருவாய்குன் றக்குடிச் சண்முகனே.**

9. போர்த்தொழில் எங்கும் புதைந்தே ஒழிந்திடச் சாதியினால்
வேர்த்திடும் சண்டை, விளங்காத் தனத்தெழு வீண்கலகம்
பேர்த்தும் எழாத பெருமை உலகில் பிறங்கிடவே
மார்கழி மாதம் **வருவாய்குன் றக்குடிச் சண்முகனே.**

10. வையம் தழைத்திட வான்கரு மேகம் வளம்சுரக்கப்
பையவே எங்கணும் பாச உணர்வு படர்வதுடன்
ஐயமில் லாமல்நல் வாழ்வு செழித்திட அன்புருவே
தையெனும் மாதம் **வருவாய்குன் றக்குடிச் சண்முகனே.**

11. ஆசில் பெருஞ்செயல். ஆழ்ந்(து)அகன்(று) ஓங்கும்
அறிவுடனே
மாசில்பே ரன்பு மனத்தில் நிறைந்துள தன்மையினால்
காசினி வாழ்சமு தாயம் கலந்து களித்திடவே
மாசிநன் மாதம் **வருவாய்குன் றக்குடிச் சண்முகனே.**

12. எங்கணும் நிற்பாய் எங்களைக் காப்பாய் இனிமையுடன்
பொங்கிப் பொலியும் புதுவாழ்(வு) அருள்வாய் பொருள்கள்
எலாம்
தங்கிச் சிறக்கத் தளரா முயற்சி உழைப்(பு) அருளப்
பங்குனி மாதம் **வருவாய்குன் றக்குடிச் சண்முகனே.**

வாரப்பதிகம்

கட்டளைக் கலித்துறை

1. சோதித் திறத்தால் அறிவைப் பெருக்கிடும் கல்வியுடன்
நீதி நிலைநாட்டும் நேரிய ஆற்றல் பிறர்மனத்தைப்
பாதியா நற்புகழ் பற்பல என்பால் பரிந்தளிக்க
ஆதித்த வாரம் **வருவாய்குன் றக்குடிச் சண்முகனே.**

2. பொங்கிப் பொலிகின்ற ஆர்வம்மேல் ஏறிச் செயற்படவும்
எங்கும்நல் வெற்றிகள் ஈட்டிஎல் லாரையும் வாழ்விக்கவும்
தங்கும் இளமை தகைசால் துணி(வு)இவை தந்தருளத்
திங்கட் கிழமை **வருவாய்குன் றக்குடிச் சண்முகனே.**

3. நவ்விபோல் துள்ளித் திரிகின்ற நல்லுடல் நாள்முழுதும்
கவ்விப் பிடித்துவாழ் நன்னெறி நல்லவர் போற்றி மகிழ்
செவ்வியில் ஆற்றும் பெருமைக் குணம்இவை
ஆக்கஎன்பால்
செவ்வாய்க் கிழமை **வருவாய்குன் றக்குடிச் சண்முகனே.**

4. இதனிற் பெரியதோர் நல்லூழ்இங்(கு) ஏதென்று
நானிலத்தார்
விதவித மாய்ச்சொல வீறுயர் நன்மக்கட் பேறுபெற
நிதம்உறு வாழ்விலே நீள்அழ(கு) ஆர்ந்த நுகர்ச்சிபெறப்
புதனாம் கிழமை **வருவாய்குன் றக்குடிச் சண்முகனே.**

5. தயாள குணமுடன் தாழ்விலாச் சுற்றம்நான் தாங்குவகை
செயாளையும் தந்து சிறந்த செயலில் வலம்பெருகத்
துயாளையும் தந்து தொடர்ந்தெனைத் தாங்கி உயர்த்திடவே
வியாழக் கிழமை **வருவாய்குன் றக்குடிச் சண்முகனே.**

6. துள்ளி வரும் நண்பர் தூயநன் மக்கள் தொடர்ந்துவரும்
வெள்ளம் என உறும் ஆற்றல் அறிவு நுகர்ச்சிமுதல்
பள்ளத் துறுபுன லாக்என் பால்வந்(து) அடைவதற்கு
வெள்ளிக் கிழமை **வருவாய் குன்றக்குடிச் சண்முகனே.**

7. இனிக்கின்ற நின்னடி என்மனத்(து) என்றும் நிலைபெறவும்
நனிபே ரறிவுடன் ஆற்றல் இவைவந்(து) அமைந்திடவும்
கனிவுடன் எங்கும்நற் காரியம் ஆற்றிச் சிறந்திடவும்
சனிக்கிழ மைக்கும் **வருவாய்குன் றக்குடிச் சண்முகனே.**

குறிப்புரை:

வாரப்பதிகம் 5. செயாள் - இடைக்குறை - செய்யாள்: திருமகள். துயாள் - குறுக்கல்விகாரம் - தூயாள் கொற்றவை: துர்க்கை.

குறிப்பு:

மாதப்பதிகம், வாரப்பதிகம் இரண்டும், குன்றக்குடி அருள்தரு சண்முக நாதப்பெருமானை வேண்டி அமைந்தன. ஆயினும் இப்பாடல்களின் கடைசி அடியை மட்டும் சிறிது மாற்றிக் கொள்வதன்மூலம் பிள்ளையார்பட்டி அருள்தரு கற்பகவிநாயகர், மதுரை அருள்தரு அங்கயற்கண்ணம்மை; பழனி அருள்தரு தண்டாயுதபாணிப் பெருமான், சிதம்பரம் அருள்தரு கூத்தப்பெருமான் ஆகியோர்க்கு உரியனவாக்கிக் கொள்ளலாம்.

பாடல்தோறும் ஈற்றடி 3, 4, 5 சீர்களை மட்டும் மாற்றி ஏற்றவாறு கொள்ளும் முறை.

1. அருள்தரு கற்பகவிநாயகப் பெருமான்:-
"............... வருவாய் விநாயகக் கற்பகமே"
2. மதுரை அருள்தரு அங்கயற்கண்ணம்மை:-
"............... வருவாய் மதுரை கயற்கணியே"
3. பழனி அருள்தரு தண்டாயுதபாணி பெருமான்:-
"............... வருவாய் பழனித்தண் டாயுதனே"
4. சிதம்பரம் அருள்தரு கூத்தப்பெருமான்:-
"............... வருவாய் திருத்தில்லை அம்பலனே"

- திருச்சிற்றம்பலம்

Typeset, Wrapper Design & Print at
KPSV COMPUTERS & OFFSET PRINTERS
237/41-43, Sekkalai Road, Karaikudi - 630 002
✆ (04565) 33477